# நம்மாழ்வார் - திருவாசிரியம்

பராங்குசன்" என்னும் திருநாமம் பெற்றுத் திகழும் ஸ்ரீநம்மாழ்வார் இப்பூவுலகத்திலுள்ள மக்கள் அனைவரும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை அடைந்து உய்யும் பொருட்டு, இக்கலியுகத்தில் திரு அவதாரம் பண்ணி அருளினார் இவர் "திருவாசிரியம்" என்னும் இந்நூலை ஆசிரியப்பா என்னும் பாவகையில் அருளிச் செய்தார்.

அனைத்து உலகங்களிலும், எவ்வித உயிரினங்களும் வாழ்தலின்றி இருந்த, உலகம் பிரளயம் உண்டாகி பாழ்பட்டு இருந்த காலத்தில், எண்ணற்ற அனைத்து வகை உயிரினங்கள் உண்டா வதற்கான மூவகைக் காரணமும்தானேயாகி நின்று ஆதிகாரணனாகிய ஆதிமூலம் என்னும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பிரம்மதேவன் என்னும் தெய்வ முளையைப் படைத்தருளினான். அந்தப் பிரம்ம தேவனைக் கொண்டு முக்கண்ணனாகிய சிவபெருமானைப் படைத்தருளினான். மேலும் மேலும் பற்பல சிறு தெய்வங்களையும் ண்டாக்கியருளினான். இவ்வாறாகத் தன் கொப்பூழ் வாயிலாகவே தோற்றுவித்த இறைவனாகிய எம்பெருமான், மிகுந்த ஆச்சரியமான குணங்களையே கொண்டிருக்கின்றான் அத்தகைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் இனிய திருவடித் தாமரைகளையே ஊழிதோறும் பற்றி நின்று ஓய்தலின்றிப் பல்லாண்டு பாடிய வண்ணம் வாழ்க வாழ்க! என்று பல்லாற்றானும் ஏத்தித் துதித்து வணங்கிக் கொண்டிருப்போம். இவ்வாறு அந்த எம்பெருமானுக்கும் பல்லாண்டு பாடி வாழ்த்துகின்ற அளவில் நாம் உய்வு பெறுவதற்கு அந்த எம்பெருமானின் திருவடிகளே மூலகாரணமாகும்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உன் திருவடிகள் இரண்டும் உலகங்களுக்கெல்லாம் மூலகாரணமாக அமைந்திருக்கின்றன. அத்திருவடிகளில் ஒரு திருவடியினைக் கொண்டு நீ இந்த உலக முழுவதையும் அளந்து கொண்டபோது, அத்திருவடிக்குள் பூமிப்பரப்பு

முழுவதையும் அடக்கி வைத்துக் கொண்டாய். அழகிய ஒளி மிக்க மற்றொரு திருவடியைப் பிரமதேவனின் உலகம் மகிழ்ச்சி அடையும்படியாகத் தேவர்கள் யாவரும் முறையாகப் பூசனைகள் செய்வதற்கு ஏதுவாக ஆகாயத்தில் நிறுத்தி வைத்தாய் தாமரைக்காடே நிறைந்து பூத்தது போன்ற உன்னுடைய திருக்கண்களும், கொவ்வைக்கனி போன்று சிவந்த உதடுகளையும் கொண்டுள்ள நீ, உள் திருவடிகளை நோக்க, ஆயிரம் சூரியர்கள் ஒன்று சேர்ந்தாற் போன்று உதித்த காலை உண்டாகும் ஒளி போன்று பிரகாசிக்கின்றாய். பற்பல வகைகளைக் கொண்டுள்ள கற்பகச் சோலைகள் ஒன்று திரண்டு காணப்படுவதைப் போன்று உன்னுடைய ஆயிரம் திருத்தோள்கள் தழைத்துக் காணப்படுகின்றன. இத்தகைய நெடிய மாலாகிய பரம் புருஷோத்தமனாகிய உன்னைத் தவிர, வேறு எவர்க்கும் இந்த உலகம் அடிமைப்பட்டிருக்குமோர்

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு இந்த அனைத்துலகங் களையும், தெய்வங்களையும் தனக்கே அடிமைப்பட்டிருக்குமாறு கொண்டுள்ளான். குளிர்ச்சி மிக்க சந்திரனைத் தன் சடைமுடியில் கொண்டிருக்கின்ற சிவனையும், நான்கு முகங்களைக் கொண்டுள்ள பிரமனையும், ஒளிமிக்கு விளங்குகின்ற தேவர்கட்கெல்லாம் தலைவனாகிய தேவேந்திரனனையும் தளக்கு உட்பட்ட ராகக் கொண்டுள்ளார். அனைத்து உலகங்களும், அனைத்து வரை, உயிரி களும் அந்த எம்பெருமானுக்கே, உட்பட்டு அடங்கியிருக்கின்றன உலகப் பிரளயம் உண்டான காலத்தில், உலகங்களும், உயிரினம் களும், மேலே கண்ட தெய்வங்களும் ஆகிய இவை அனைத்தையும் எம்பெருமான் தன் திருவயிற்றினுள்ளே அடக்கி வைத்திருந்து பாதுகாத்தருளினான். நிலம், நீர், தீ, காற்று, சூரிய, சந்திரன் இயங்கிகள் கொண்டிருக்கின்ற ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களையும் தன் திருவயிற்றினுள்ளே அடக்கி வைத்திருந்தான். இவ்வாறாக அனைத்தையும் அடக்கி வைத்திருந்து, ஒப்பற்றதோர் சிறிய ஆலமரம் தளிரின்மீது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பள்ளி கொண்ட குளினான். இஃது எம்பெருமானின் ஆச்சரியமான செயலே அன்றோ இத்தகைய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை அன்றி வேறு எவ்விதத் தாழ்ந்த தெய்வத்தையும் நாம் ஆண்டவனாகக், கொள்ள மாட்டோம்.

# நம்மாழ்வார் - பெரிய திருவந்தாதி

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப்பற்றி எடுத்துரைப்பதில் அடியேனைக் காட்டினும், ஊக்கமும், எழுச்சியும் கொண்டு முந்தியவாறு செய்கின்ற என் நன்மனமே நீ மட்டும் தனியாகச் சென்று செயல்படாமல், நாமிருவரும் ஒன்று சேர்ந்து, காயாம்பூ நிறம் கொண்ட திருமேனியினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந் நாரம் யணனின் திருக்கல்யாண குணங்களை நம்மிருவரின் நாவினால் தொடுக்கப்பட்ட அன்புடன் கூடிய நல்ல பொருத்தமான வார்த்தை களைக் கொண்டு அவனுடைய பெருமைகளை விரிவாகப் புகழ்ந்து பேசுவோம்

பெருமான் ஸ்ரீயந்தாராயணனே உன்னுடைய திருக் ணங்கள் அனைத்தையும் விரிவாகப் புகழ்ந்து போமலிருப்பதும் யற்றிச் சிந்திக்காமலிருப்பதும் நன்னமையே அன்றோ அஃதன்றி என்னுடைய புகழையும், திருக்குணங்களைப் பற்றியும் சிந்திக்கக் கூடிய செயல்களாகின்ற இவையன்றோ தமையை அளிக்கக் கூடியதாக அமைகின்றன. தங்களின் இத்தகைய செயல்கள் இன்னின்னவாறு நன்மை பயக்கக் கூடியவை என்று அடியேன் உண்மையில் தெரிந்து வைத்திருப்பினும் அவைகளெல்லாம் அடியேனுக்குட்பட்டதன்று என்பதாலே அடியேனால் இவைகளைப் பற்றிக் கொள்ளவோ அன்றிவிட்டுவிடவோ இயலவில்லை. எனவே அடியேனால் செய்யக் கூடியது யாதுளது? அடியேன் உன்னைப் புகழ்ந்து கொண்டிருப்பதற்கான சக்திய உடையேனல்லேன்,

(கருநிறத்தின் வடிவுடைய சோதியாக விளங்கும் எம்பெருமான் கண்ணபிரான் கடல் போன்ற கம்பீரமான மிகப் பெரிய சோதி வடிவு பெற்றுள்ளான். அத்தகைய ஸ்ரீகண்ணபிரானுக்கு என்னுள்ளம் அடிமைப்பட்டு விட்டது. ஆகையால், அடியேனைக் காட்டிலும் மிகுந்த பேறு பெற்றவர் யாவருமில்லை. அடியேனைக் காட்டிலும் மிகுந்த புகழ்பெற்றவர்களும் வேறு எவருமில்லை. எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு அடிமைப்பட்டுள்ள பெரும்பேறு பெற்றமிக்க பெரும் புகழை உடையவனாவேன்.

தாமரை மலரின் மீது அமர்ந்துள்ளவாறு சிவந்த திருமேனி கொண்ட திருமகளைத் தன் திருமார்பில் சேர்த்து வைத்துக் கொண்டு இருக்கின்றீர்கள். மேலும் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் இந்தப் பூமியை எடுத்து வைத்துப் பாதுகாத்தருள் புரிந்தீர்கள். அடியேனின் உள்ளம் இம்முடைய திருவடித் தாமரைகளை அடைந்து, உமக்கு மிகவும் அணுக்கராக ஆகிவிட்டது. ஆயினும் பாவங்கள் பலவற்றைச் செய்திருக்கின்ற அடியேன் மட்டும், உம்மிடத்தே அணுக்கத் தொண்டராக இருப்பதற்கு இயலாமல், வெகு தொலைவிலேயே இருந்து கொண்டிருக்கின்றேன்.)

தண்ணீரில் மூழ்கியிருக்காத இப்பாந்துள்ள பூமி நீயே அப்பூமியைச் சுற்றிலும் சூழ்ந்துள்ள நீரும் இவ்வுலகில் இயங்குகின்ற காற்றும் நீயே! தீயும் நீயே ஆகாயமும் நீயே! ஆணவத்துடன் எதிர்த்துப் போரிடுவதற்கு ன்றுள்ள இராவணனின் உயிரைப் போக்கியருளிய எம்பெருமான் திருமாலின் வலிமையே மிகப் பெரியதாகும். அத்தகைய உன்னுடைய வீரத்தின் பெற்றியை அடியேன் என்னவென்று எடுத்துரைப்பேன்

ஸ்ரீ கண்ணபிரானின் தத்துவத்தை அறிந்து கொள்ளாத அறிவின்மை காரணமாகப் பேய் வடிவில் வந்த பூதனை' என்பவள் நஞ்சுப்பால் நிறைந்திருக்கின்ற தன் முலையை அளித்ததன் காரணமாகத் தானே அழிந்தாள். உனக்கும் அவளுக்கும் ஏதேனும் பொருத்தம் உண்டோ ? புலன்கள் காரணமாக உண்டாகும் ஆசைகளைச் செயல்படுத்துவதன் பொருட்டு ஊனமடைந்திருக்கிறாய். இத்தகைய நீ எம்பெருமானை அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறாயே! இத்தகைய உன் முயற்சியாளனக பாம்பின் வாயில் தன் கையைவிட்டுப் பார்ப்பதைப் போன்றதாகும்

அடியேனிடத்தே தங்கியிருந்த கொடிய பாவங்கள் அனைத்தும் அகன்றுவிட்டன. இதற்கு முன்பெல் லாம் பெருமையுடன் அடியேன் மீது ஆணையிட்டுக் கொண்டு என்னைத் துன்புறுத்திக் கொண்டு இருந்தன. ஆனால், எம்பெருமாள் அடியேனின் உள்ளத்தினுள்ளே புகுந்து தங்கின பின்பு

அம் தீவினைகள் தங்கியிருப்பதற்கென்று இடமின்மை காரணமாக கதறிக் கொண்டு, தன் கால்கள் நொந்து போகும்படியாக ஓடிய வண்ணம் அலைந்து கொண்டிருக்கின்றன. மேலும் அத்தீவினைகள் மிகவும் நொந்து போன அளவில் இளைத்துப் போய்க் காணப்பா கின்றன. இவையனைத்தும் எம்பெருமான் திருமாலின் திருவருளே யன்றோ - மகன் நாயை ஆதல் இளைப்பா யிளையாப்பாய் நெஞ்சமே! சொன்னேன் இளைக்க நமன்தமர்கள் பற்றி இளைப்பெய்த, தாய்தந்து மோதாமல் நல்குவான் ல்காப்பான்,தாய்தந்தை எவ்வுயிர்க்கும் தான்.

என் நன்மனமே நம் இறுதிக் காலத்தில் இயமதூதர்கள் நம்மைப் பிடித்து இழுத்து வந்து, நாம் துடிதுடித்துப் போகுமாறு நம்மீது தாய்களை ஏவி விடுவார்கள். இவ்வாறு இயம தூதர்களின் கைகளில் நாம் சிக்கித் தவிக்காதவாறு நமது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அருள்புரிந்து நம்மைக் காப்பாற்றுகிறான். அத்தகைய எம் பெருமானின் திருவருள் நமக்குக் கிட்டவில்லையாயினும் அதைப் பற்றி எண்ணி வருத்தம் கொள்ள வேண்டாம். அந்த எம்பெருமான்

திருவருள் நமக்குக் கிடைத்தாலும் சரி, கிடைக்காவிட்டாலும் சரி அனைத்துயிரினங்கட்கும் தாயும் தந்தையும் அவனே ஆவால் இத்தகைய உண்மையை உனக்கு உணர்த்திவிட்டேன். இவ்வாறு அந்த ஏம் பெருமான்மீது கொண்டுள்ள நம்பிக்கைக்குக் குறைவு ண்டாகாமல் இருப்பாயாக . சிறிதும் தளர்ச்சி அடையாதிருப்பாயாகனே தனித்தோன்றல் தன்னளப்பொன் றில்லாதான் தானே பிறர்கட்கும் தற்றோன்றல், தானே இளைக்கிற்பார் கீழ்மேலாம் மீண்டமைப்பா னானால், அளக்கிற்பார் பாரின்மேல் ஆர்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தனக்குத் தானே ஒப்பான வனன்றிப் பிறர் எவர்க்கும் ஒப்பற்ற நிலையில் தனக்குத் தானாகவே கோன்றியருளிய அனைவர்க்கும் தலைவனான இறைவனாகத் திகழ்கின்றான். அந்த எம்பெருமான் அனைத்துப் பொருள்களிலும் நிறைந்து காணப்படுகின்றான். இத்தகைய எம்பெருமான் தன்னுடைய காக்கும் தொழிலில் ஓரளவு தளர்ந்திருப்பினும் உலகம் முழுவதுமே தலை கீழாகி மாறி அதன் இயல்புத்

தன்மையே நிலைகுலைந்து போய்விடும். அவ்வாறு ஒரு வேளை உலகம் தலைகீழாக மாறும் நிலையை அடைந்தாலும், அந்த எம்பெருமான் திருமால் அதனைச் சரிசெய்துவிடும் ஆற்றல் மிக்கவராக விளங்கு கிறார். அத்தகைய எம்பெருமானின் ஆளுமையை யாரால் அளவிட்டுரைக்க முடியும்? அந்த எம்பெருமான் திருமாலைக் காட்டிலும் காக்கும் கடவுள் வேறு எவருமில்லை

இருட்டு வடிவெடுத்தாற் போன்ற கரிய நிறமுடைய அழகான திருமேனியை உடைய எம் பெருமான் ஸ்ரீமந்தாராயணதுக்கு அடியேனும், அடியேனின் மனமும் ஒன்று சேர்ந்து இசைந்து ஆட்பட்டிருக்கின்றோம். அத்தகைய எம்பெருமான் அடியேனுக் சுருளிய "திருவருள்" என்னும் தடியின் உதவி கொண்டு அடியேனுக்குண்டாகி இருக்கின்ற பாவங்களை அடித்துத் துரத்திக் காடுகளிலும், மலைகளிலும் சென்று விடுவதற்கு, அடியேனும் அடியேனின் மனமும் ஒன்று சேர்ந்து இசைந்து நின்றோம்.

நறுமணம் கமழ்கின்ற திருத்துழாய் மாலையை அணிந்திருக் இன்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எப்படிப்பட்டவர்க்கும் தன் முயற்சியின் காரணமாக நேராக எளிதில் அறிந்து கொள்ளும் அளவிற்குச் சாதாரணமானவன் அல்லவே! ஆயினும் அந்த எம் பெருமானுக்கு ஆட்பட்ட அடியவர்களிடத்தே, அவர்கள் கொண்டி குக்கும் அன்புடன் கூடிய பக்திக்குத் தன்னை எளியனாகவே காட்டுவான். ஆக, இந்த எம்பெருமான் இங்கே அடியேனால் உணர்ந்து கொள்ளும்படியாக எளிமையாகத் தன்னைக் காட்டித் திருவருள்புரிவான்.